4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 933/2023 நாள்: 02.04.2026 வா.சா.1 – சேனாதிபதி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

எனக்கு துங்காவி கிராமத்தில் 30 ஏக்கர் நிலம் உள்ளது. முத்துகுவியல் பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் தொழில் கோவை முதல் உடுமலைபேட்டை வரை பங்குதாரராக இருந்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் முத்துகுவியல் பைனான்சில் பங்குதாரர் என்றும், வழக்கிற்காக இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி செந்தில்குமாரை எனக்கு சுமார் 30 ஆண்டுகளாக தெரியும். பிரதிவாதி எனக்கு உறவினர்தான். பிரதிவாதிக்கு பணத்தம்பட்டியில் விவசாய நிலமுள்ளது, அதில் பெரிய அளவில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி தனிபட்ட முறையில் தாய் கோழிபண்ணை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி கௌதம் பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதி கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர் என்றும், அவருக்கு ஏமாற்றும் எண்ணம் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய சில விவரங்கள் ஞாபகம் இல்லை என்று ஏற்கனவே முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் எனறால் சரிதான். இரண்டு வருடமாக இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றிய அனைத்து விவரங்களும் இரண்டு வருடங்களாக ஞாபகம் இல்லாத போது நான் தாக்கல் செய்துள்ள 30.10.2025 தேதியிட்ட முதல் விசாரணை வாக்குமூலம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுபம் பவுல்ட்ரி பார்முக்காக நானும்,

பிரதிவாதி மற்றும் மற்ற பங்குதாரர்களும் சேர்ந்து ஏற்படுத்தி கொண்ட கூட்டாண்மை பத்திரம் என்றால் சரிதான், ஆனால் அதில் முதலாவது உள்ள கையொப்பம் என்னுடையது தான், 3வது கையொப்பம் என்னுடையது அல்ல. மேற்படி **கூட்டாண்மை ஆவணம் பி.சா.ஆ.1**. மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மை நான் நிர்வகித்து வந்து அதற்கான வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், மேற்படி நிறுவனத்திற்கான 2010 – 2011 வருமான வரி கணக்கு என்னிடம் காட்டப்படுவது தான், மேற்படி **வருமான வரிகணக்கு நகல் பி.சா.ஆ.2**. எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக கிடைத்த சொத்தின் ஒரு பகுதியை கடந்த 14.05.2018 அன்று ஒரு பாலாஜி விண்ட் மில்லுக்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான், அதற்கான கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது தான். மேற்படி **கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3**. மேற்படி கிரைய ஆவணத்தில் பிரதிவாதி 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். சுபம் பவுல்ட்ரி பார்மினுடைய வரவு செலவை பார்ப்பதற்காக ஆடிட்டர் கந்தசாமி என்பவரை நியமித்திருந்தேன் என்றால் சரிதான். நான் மற்றும் மற்ற பங்குதாரர்கள் அனைவரும் சேர்ந்து மேற்படி ஆடிட்டர் கந்தசாமியிடம் மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்ம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை திரும்ப தருமாறு ஒரு கடிதம் அனுப்பினோம் என்றால் சரிதான், மேற்படி கடிதம் என்னிடம் காட்டப்படுவது தான், மேற்படி **கடிதம் பி.சா.ஆ.4**. நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்திற்குரிய சிட்டா, அடங்கல் ஆகியவை மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்ம் பெயரில் உள்ளது என்றால் சரிதான், மேற்படி சிட்டா, அடங்கல் என்னிடம் காட்டப்படுவது தான், மேற்படி **சிட்டா, அடங்கல் (எண்ணிக்கை – 5) பி.சா.ஆ.5**. மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மில் நான், எனது மகன் இருவரும் பங்குதாரர்கள் என்றால் சரிதான். மேலும் எனது மனைவியின் சகோதரர் ராமலிங்கமும் அதில் பங்குதாரர் என்றால் சரிதான். சுபம் பவுல்ட்ரி பார்ம் பார்ட்னர்சிப் என்ற முறையில் என்னுடைய தனிப்பட்ட சொத்தை கிரையம் வாங்கும் போது என்னுடைய

மற்றும் எனது மகன், எனது மைத்துனர் ஆகியோருடைய பங்கை தவிர்த்து மற்ற பங்குதாரர்கள் அவர்களுடைய பங்கு தொகையை விகிதார அடிப்படையில் எனக்கு செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. (மேற்படி கேள்வியை பொறுத்து வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்து மேற்படி கேள்வியை சாட்சியிடம் சட்டப்படி எழுப்ப முடியாது என்று கூறினார்.) சுபம் பவுல்ட்ரி பார்ம் நிறுவனத்தின் வங்கி வரவு செலவு கணக்கை தற்போது வரை நான் தான் நிர்வகித்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தை பொறுத்து பெறப்பட்ட பி.சா.ஆ.5 ஆவணம் சம்பந்தமாக வழக்கு என் மீது நிலுவையில் உள்ளதா என்றால் சாட்சி உள்ளது என்று கூறுகிறார். சாட்சி தற்போது எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்று கூறுகிறார். என் மீது இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.643/2024 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞரை நியமித்து நான் முன்னிலையாகவில்லை. மேற்படி வழக்கில் நான் முன்னிலையாகி எதிர்வாதம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கை பொறுத்து சமரச தீர்ப்பாயத்தில் ஆஜராகி நான் எவ்வித கையொப்பமும் போட்டுள்ளேனா என்றால் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்று கூறுகிறார்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.02 18:07:05 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.